

சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம் துளுவ வேளாளர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., தலைமை தாங்கி ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். இக்கூட்டத்தில் அவைத்தலைவர் முரா.கருணாநிதி, தே.மலையரசன் எம்.பி.,தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார், ஏ.ஏ.ஆறுமுகம், சந்திரமோகன், மனோகரன், சோமசுந்தரம், முத்துலிங்கம் , ஒன்றிய செயலாளர்கள் டாக்டர் வே.செழியன், இரா. வரதராஜன், மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, நகர செயலாளர்கள் என்.பி. வேல்முருகன், கே. பாலசுப்பிரமணியம், ஏ.ஜி.ராமச்சந்திரன், பேரூர் செயலாளர்கள் காங்கமுத்து, பாபு, வெங்கடேஷ் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்வரும் 10.11.2025 அன்று புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை புரிந்து புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தும், பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்க உள்ளதை தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் இன்று (03.11.2025) நடைபெற்றது. உடன், மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை அவர்கள் (கந்தர்வக்கோட்டை), மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பா.ஜெயசுதா, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (காவிரி வைகைகுண்டாறு) திருமதி.ஆர்.ரம்யாதேவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.எஸ்.திருமால், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், துணை மேயர் எம்.லியாகத் அலி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### திருவாரூர் - கழக மூத்த முன்னோடி

# சுப்புணி (எ) எம்.சுப்பிரமணியன் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 5 -

திராவிட முன்னேற்றக் கழக தொடக்க கால உறுப்பினர் - திருவாரூர் மேலவடம் போக்கித் தெருவைச் சேர்ந்த சுப்புணி என்கிற எம்.சுப்பிரமணியன் (2.11.2025) அன்று மாலை இயற்கை எய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்.

இச் செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் “திராவிட முன்னேற்றக் கழக தொடக்ககால உறுப்பினரான திருவாரூர், மேலவடம்போக்கித் தெருவைச் சேர்ந்த திரு. சுப்புணி (எ) எம்.சுப்பிரமணியன் அவர்கள் 02.11.2025 அன்று மறைவுற்றார் என்ற செய்தியறிந்து வேதனை அடைந்தேன்.

சுப்புணி (எ) சுப்பிரமணியன் அவர்கள் கடந்த 1974 ஆம் ஆண்டிலேயே பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் தனது சொந்த நிதியில் பேருந்து நிழலகம் அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து மக்கள் பணியை மேற்கொண்டவர் ஆவார். கழகப் பற்றாளர்.

தலைவர் கலைஞர் அவர்களிடம் மிகுந்த பாசத்துடன் பழகியவர். அவரை இழந்து வாடும் அப்பகுதி கழகத்தவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்யதியில் குறிப்பிட்டுள்ளார்.

# திருவாரூரில் “என் வாக்குச்சாவடி வெற்றிவாக்குச் சாவடி” ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் கே.என்.நேரு - பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர், நவ.5-

திருவாரூர் மாவட்டத்திற்கு உட்பட்ட திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நன்னிலம் சட்டமன்ற தொகுதிகளின் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கான வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் BLA2, BDA, மற்றும் தி.மு.கழக செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம், கழக முதன்மை செயலாளரும் திருச்சி மண்டல பொறுப்பாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எ.ல்.ஏ., தேர்தல் பொறுப்பாளர்கள் எஸ்.கே.வேதரத்தினம், ஜெகவீர பாண்டியன், ராஜாசீனிவாசன், சௌமியன் வைத்திய நாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி. ராஜமாணிக்கம், ப. ஆடராசன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்களம் ஜி.பாலு, அவைத்தலைவர் க.தன்ராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், மு. வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் கே.என்.நேரு, வாக்குச்சாவடி பணிகளை சரியாக செய்தோ மேயானால் நம் வெற்றி உறுதியாகும்.மீண்டும் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி வரவேண்டியது அவசியம். அதுதான் நமது தமிழ் நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பை தரும். தி.மு.க. நிர்வாகிகளை குறிவைத்து தாக்கும் பா.ஜ.க.வின் முயற்சி யால் நாங்கள் துவண்டுவிட மாட்டோம். பந்துபோல மீண்டு எழுவோம் எனவும், வாக்குச்சாவடி முகவர்களான BLA2, BDA ஆகியோரின் பணிகள் குறித்தும், SIR தீவிர வாக்காளர் திருத்தம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

வாக்குசாவடி முகவர்கள் அனைவரும் ஒன்றிய பி.ஜே.பி. அரசின் கைப்பாவையாக செயல்படும் தேர்தல் கமிஷன் SIR உள்ளிட்ட செயல்பாடுகள் மூலம் என்னென்ன குறுக்குவழிகளை கையாண்டு தில்லுமுல்லுகளை மேற்கொண்டாலும், கழகத்தலைவர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படியும், கழக சட்டத்துறையின் மூலம் கொடுக்கப்பட்டிருக்கும் வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் அவற்றை எதிர்கொண்டு “வெல்வோம்200 படைப்போம் வரலாறு” என்கிற கழகத்தின் முழக்கத்தை வென்றெடுப்போம் என தீர்மானம் மேற்கொண்டு களப்பணிகளை மேற்கொள்ள உறுதி யேற்றனர்.

### தி.மு.க. மாணவர் அணி

## மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க, மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் / பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்

**திருப்பூர் கிழக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - கோ. குகன் நெ. 1, ரங்கம்பாளையம், தெப்பம்பட்டி அஞ்சல், தாராபுரம், திருப்பூர் - 638657.

துணை அமைப்பாளர்கள் - 1) ச. சிலம்பரசன் 10/166, காந்தி நகர், அலங்கியம் அஞ்சல், தாராபுரம், திருப்பூர் - 638657. 2) ஜி. சிவராஜ் 131, எல்.கே. நகர், வெள்ளக்கோயில், திருப்பூர் - 638111. 3) எஸ். சோபனா 284, தாராபுரம் சாலை, காங்கேயம், திருப்பூர் - 638701. 4) பா. அருண்மொழி 1/1, எச்.டி. தெரு, கரூர் மெயின் ரோடு, மூலனூர், தாராபுரம் வட்டம், திருப்பூர் - 638106. 5) எஸ். மேகநாதன் 151/3, பார்க் ரோடு, மேற்கு சென்னிமலை, ஈரோடு.

**நீலகிரி மாவட்டம்**

நீலகிரி மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்களாக ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஹபீப் ரகுமான், சந்திரகுமார், அசார்கான் மற்றும் ஜெகதீசன் ஆகியோருக்கு பதிலாக கீழ்கண்டவர்கள் நீலகிரி மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

1) விவேக் ஆனந்த் பொன்தோஸ் 4/147, பேரகல் மந்து கோடநாடு, நீலகிரி மாவட்டம் - 643217. 2) அருண் கிருஷ்ணன் 5/522அ, அரக்கம்பை கிராமம், குண்டாட அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம் - 643217. 3) முகமது பயாஸ் 84, ராமச்சந்திரா விலாஸ் பாம்பே காஸ்டல், உதகை, நீலகிரி மாவட்டம் - 643001. 4. கிஷோக் 2/567அ,10, ஏழுமுறம், கூடலூர், நீலகிரி மாவட்டம் - 643212.

**காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்**

**தாம்பரம் மாநகரம்**

அமைப்பாளர் - எஸ். கார்த்திக் 14/16, 3வது தெரு, ரங்கநாதபுரம், மேற்கு தாம்பரம், சென்னை - 600045.

துணை அமைப்பாளர்கள் - 1) ஏ. செந்தில்குமார் 11, சுப்பிரமணியபாரதி தெரு, பாலாஜி நகர், அனகாபுத்தூர், சென்னை - 600073. 2) குட்டி (எ) தினேஷ் 15, சாலமன் தெரு, அன்னை தெரசா நகர், கிழக்கு தாம்பரம், சென்னை - 600059. 3) அ. ஜோஸ் பிரபு 187-பி1, முதல் தளம், 38வது தெரு, சங்கர் நகர், பம்மல், சென்னை - 600075. 4) இலக்கியா லோகநாதன் 1/3, அசோக் நகர், தெற்கு தெரு, கணபதிபுரம், கிழக்கு தாம்பரம், சென்னை - 600059. 5) எம். இளவரசன் 23-9வது தெரு, வினோபாஜி நகர், அஸ்தினாபுரம், சென்னை - 600064. 6) சி.பா. வினோத்குமார் 20, லேபர் பள்ளித் தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600070. 7) இரா. முரளிதரன் டெம்புள் டவர் சாலை, சுப்புராய நகர், குரோம்பேட்டை, சென்னை - 600044.

**தஞ்சை வடக்கு மாவட்டம்**

**கும்பகோணம் மாநகரம்**

அமைப்பாளர் - எல்.ர. கௌதமன் 106, உப்புக்காரத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) ர. தீனா 41, ஆழ்வான்கோவில் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர். 2) சிவ. சற்குருநாதன் 159, நரசிங்கபெருமாள் கோவில், மேலத் தெரு, தாராசுரம், கும்பகோணம், தஞ்சாவூர். 3) கோ. ராகுல் 46-107, டபீர் கிழக்கு தெரு, கும்பகோணம், தஞ்சாவூர். 4) க. ஹரிஹரன் 58, மிஷின் தெரு, தாராசுரம், கும்பகோணம், தஞ்சாவூர். 5) ரா. விஜயலெட்சுமி 23, சுவாமி மலை மெயின் ரோடு, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர்.

தருமபுரி கிழக்கு மாவட்டம்

அமைப்பாளர் - கே. அன்பரசன் 4/310, ஜாகீர்வரகூர் கிராமம், புலிக்கரை அஞ்சல், பாலக்கோடு வட்டம், தருமபுரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கா. கௌதம் இலக்கியம்பட்டி அஞ்சல், தருமபுரி மாவட்டம். 2) ல. கிருஷ்ணமூர்த்தி 2/166, பூதனஅள்ளி வட்டம், தருமபுரி. 3) கோ. திருமலைவாசன் மாரியம்பட்டி கிராமம், தளவாய்அள்ளி அஞ்சல், நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி மாவட்டம். 4) செ. அரவிந்த் 2/678, வாழைப்பட்டி கிராமம், கம்பைநல்லூர் அஞ்சல், காரிமங்கலம் தாலுக்கா, தருமபுரி மாவட்டம். 5) க. பிருந்தா லாடக்கார தெரு, பென்னாகரம், தருமபுரி மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை – 18**
**நாள்: 3–11–2025.**

**இரா. ராஜீவ்காந்தி,**
**செயலாளர்,**
**தி.மு.க. மாணவர் அணி**



தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, கல்யாணபுரம் 1 சேத்தி ஊராட்சி, சின்ன கண்டியூர் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட சுந்தரமூர்த்தி குடும்பத்தினரை தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, நேரில் சந்தித்து ஆறுதல் கூறி நிவாரணம் வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர் எஸ்.சிவசங்கரன், கோ.அரசாபகரன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வண்ணை தேவகி

### நவம்பர் 5 (2009)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது கொள்கைப் பற்றாலும், பேச்சாற்றலாலும் தன்னலம் கருதாத் தியாகத்தாலும் ஈர்க்கப்பட்டு, இளம்வயதிலேயே கழக மேடைகளில் உரையாற்றியவர்.

கழகம் நடத்திய போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

கழக மகளிர் அணியின் செயலாளராகவும், துணைத் தலைவராகவும், இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி சுகாதாரநிலைக்குழுவின் தலைவராக திறம்பட பணியாற்றியவர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் 1999ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் ‘அம்பேத்கர் விருது’ வழங்கி சிறப்பித்தார்.

“கழகம், கழகம் என்று தன்வாழ்நாள் முழுவதையும் கழகத்திற்காகவே செலவழித்து, அவர் பேசாத கிராமங்களே இல்லையென்ற அளவிற்கு, கழகப் பிரச்சாரத்தில் தன் இளம்பிராயத்திலிருந்து ஈடுபட்டவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# நெய்வேலி தொகுதியில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” சிறப்புக்கூட்டம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமை! சபா.இராஜேந்திரன் முன்னிலை!

கடலூர், நவ. 5 -

கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்ற தொகுதியில் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆலோசனைப்படி, தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி, “ஆலோசனைக் கூட்டம் கீழக்கொல்லை தேவி மஹாலில் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமை தாங்கினார் .

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர்; பாக நிலை முகவர்கள் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகள் கிளை செயலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகளை குறித்து விளக்க உரையாற்றினார் .

மேலும் காணொளி காட்சி வாயிலாக பயிற்சியும் ஆலோசனையும் வழங்கப்பட்டது.


இக்கூட்டத்தில் நெய்வேலி தொகுதி பார்வையாளர் பா.துரைசாமி ,திட்டக்குடி தொகுதி பார்வையாளர் சுபா.சந்திரசேகர் பொதுக்குழு உறுப்பினர் பொ. புகழேந்தி ,குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அ.குணசேகரன் பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர். சந்தோஷ்குமார் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பழனி.சுரேஷ் ஒன்றிய அவை தலைவர் ஆ.ராஜா , மாவட்டப் பிரதிநிதிகள்ஜி. ஆடலரசன் கே.எம்.ஜெகநாதன் ,

ஒன்றிய துணை செயலாளர் செல்வகுமார் ஒன்றிய பொருளாளர் ஐயப்பன் துணை செயலாளர் ஏழுமலை, ஒன்றிய அவைத்தலைவர்,வீர.ராமச்சந்திரன் ,பொருளாளர் ஆனந்தஜோதி மாவட்டப்பிரதிநிதி இராம.வெங்கடேசன், நகர அவைத் தலைவர் நன்மாறப்பாண்டியன், நகர கழக நிர்வாகி கள் கருப்பன், மதியழகன் ,ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ் , மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர்.ராஜேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் துணை அமைப்பாளர் ஆறுமுகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் பாக நிலை முகவர்கள் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தீப்பொறி ஆறுமுகம்

### நவம்பர் 5 (2016)



சிறிய வயதிலேயே பேச்சாளராகி, கழக மேடைகளில் எந்த கருத்தையும் தைரியமாக எடுத்துச் சொல்லி, தமது பேச்சாற்றலால் பெரும் புகழ் பெற்று, தனக்கென்று ஒரு ரசிகர் பட்டாளத்தையே உருவாக்கிக் கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில், மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், “இவர் தனது பதினைந்தாவது வயதிலேயே தந்தை பெரியார் அவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றி, பெரியாரால் அப்போதே பாராட்டப்பட்டவர். இவருடைய பேச்சைக் கேட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் இவருக்கு “தீப்பொறி” என்ற அடைமொழியை குறிப்பிட்டு, பின்னர் காலப்போக்கில் “தீப்பொறி” என்றாலே இவரைக் குறிப்பிடும் அளவிற்கு பெயர் பெற்று விட்டார்” என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**